செ.வெ.எண்.138 நாள்:02.03.2018

திருநெல்வேலி டவுண் கல்லணை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் CMES அகடமி மூலம் நடத்தப்பட்ட அறிவியல் செயல்விளக்க பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

-----

திருநெல்வேலி டவுண் கல்லணை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் CMES அகடமி மூலம் அறிவியல் செயல்விளக்க பயிற்சி மாணவிகளுக்கு இன்று (02.03.2018) நடத்தப்பட்டது. அறிவியல் செயல் விளக்க பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

பள்ளி மாணவ, மாணவிகள் புத்தகங்கள் மூலம் பல்வேறு அறிவியல் விளக்கங்களை படித்தாலும் அவைகளை செயல் விளக்கத்தின் மூலம் எளிதில் அறிந்து கொள்ள முடியும். அரசு பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு CMES அகடமி மூலம் அறிவியல் செயல்முறை விளக்கம் வாயிலாக கற்றுக்கொள்ளும் மாதிரி திட்டத்தின் படி பரிச்சாத்தமாக இன்று கல்லணை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் செயல்விளக்கம் செய்து கண்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீங்கள் அறிவியல் பாடத்தினை எளிதாக புரிந்து கொண்டு படிக்க முடியும். நீங்கள் சிறப்பாக கல்வி பயின்று, நல்ல குறிக்கோள்களை வளர்த்து உயர் கல்வி கற்று உயர் பதவிகளை பெற வேண்டும். என பேசினார்

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாநகர நல அலுவலர் டாக்டர்.பொற்செல்வன், பள்ளி கல்வித்துறை சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் திரு.கஜேந்திரபாபு, உதவி தலைமையாசிரியர்கள் திருமதி.லாதா, திரு.நல்லசிவம், மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.